மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை
அசல் வழக்கு எண்.616 /2019

**2025–ம் ஆண்டு நவம்பர் மாதம் 05–ம் நாள் புதன் கிழமை** வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW–1 வது நபரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :பசுருதீன் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | :சக்கரபாஷா சாயபு | வட்டம் | :வேப்பந்தட்டை |
| கிராமம் | : | வயது | : 73/2025 |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

(i) குலாம்மொய்தீன் என்பவருக்கு காதர் பாட்ஷா, முகமது முஸ்தபா ஆகியோரத் மக்கள் ஆவார். குலாம்மொய்தீனுக்கு முகமது முஸ்தபா புல எண.44/1ல் 01.42 செண்ட்டை தானமாக பெற்றுள்ளார். அயல்நாடு நான் சென்றேன் என்பதற்கு பாஸ்போட் நான் தாக்கல் செய்யவில்லை. கட்டிடம் கட்டக்கூடாது என்று எனக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டதா என்றால் இல்லை என் அண்ணனுக்கு அவரது மருமகளுக்கும் நோட்டீஸ் அனுபப்பட்டதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நானும் எனது அண்ணன் முகமது அலியும் Caveat OP.No.371/15 ஒரு கேவியட் தாக்கல் செய்தோம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. கேவியட் தாக்கல் செய்துவிட்டு வழக்கிற்காக அதுபற்றி தெரியாது என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8ல் ஒப்புதல் அட்டையில் உள்ள கையெழுத்து என் அண்ணன் மருமகளுடையது தான். வா.சா.ஆ.7 வழக்கறிஞர் அறிவிப்பை என் பெயரில் கொடுத்திருக்கலாம். வழக்கு சொத்தான புல எண்.44/1ல் உள்ள என்னுடைய நிலம் கிழக்கில் உள்ளது அதற்கு மேற்கில் 24 செண்ட் 1ம் பிரதிவாதி வகையறாவிடம் உள்ளது. உங்களுக்கு சொத்திற்கு வில்லங்கம் போட்டு பார்த்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு தாக்கல் செய்யாமல் வேண்டுமென்றே தாக்கல் செய்துள்ளேன் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(ii) உங்களது அண்ணன் நடக்க முடியாத காரணத்தினால் அவரை தூக்கி கொண்டு வந்து விசாரிக்க தயாராக உள்ளீர்களா என்றால் தயாராக உள்ளேன். உங்களது அண்ணன் மருமகளை சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளீர்களா என்றால் அவர் வெளிமாநிலத்தில் சென்றுள்ளதால் அவர் வர மாட்டார். உண்மையிலேயே 1ம் பிரதிவாதி காதர் பாட்ஷா இடத்தில் நான் வீடு கட்டவில்லை என்றால் எனது அண்ணனை மன்ற வழக்கறிஞரை ஆணையராக நியமித்து அவரை

விசாரித்திருப்பேன் ஆனால் அவ்வாறு செய்யவில்லை. காதார் பாட்ஷா கிரையம் பெற்ற சொத்தில் கட்டிட கட்டியுள்ளீர்கள் என்றால் இல்லை. வாதி வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over to the Witness and admitted by the Witness to be correct

District Munsif
– Cum-
Judicial Magistrate